# மனைப்பொருளியல்

# இலங்கையின் புடவை வகையும் ஆடைக் கைத்தொழிலும்



e-தக்சலாவ கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa



தேர்ச்சிமட்டம் 6.1

# இலங்கையின் புடவை வகை மற்றும் ஆடைக் கைத்தொழில்

- நார், நூல்,புடவை, நேர்த்திகள் என்பன **புடவைக் கைத்தொழிலிற்குரியவை ஆகும்.**



- **நார்** —> தாவரங்களிலிருந்தும், விலங்குகளிலிருந்தும் ஏனைய வளங்களிலிருந்தும் இயற்கையாகவும் செயற்கையாகவும் பல்வேறு மூலகங்களினாலானதாகும்.
- **நூல்** —> நார்களை புடைப்பாக்கம் செய்வதனூடாக பெறப்படுவது.

## ஆடைக் கைத்தொழிலின் முக்கியத்துவம்

- பெருமளவு தொழில் வாயப்புக்கள் உருவாதல்.
- உயர்கல்வி வாயப்புக்கள் உருவாதல்.
- மொத்த தேசிய உற்பத்தியில் பங்களிப்பு செய்தல்.
- தேசிய புடவை உற்பத்தியின் வளர்ச்சிக்கு உயர்கல்வி வாய்ப்புக்கள் பெரும் உதவியாய் அமைதல்.
- ஆடைக் கைத்தொழிலில் காணப்படும் போட்டித்தன்மை காரணமாக பல்வேறு ஆராய்ச்சிகளிலும் புத்தாக்கங்களிலும் ஈடுபடல்.
- ஆடைக் கைத்தொழிலின் முன்னேற்றம் காரணமாக அதற்கு அவசியமான தொழில்நுட்பம் அறிமுகமாவதால் வேறு கைத்தொழில்களிற்கு பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்ப முறைகளிலும் பொறிகளிலும் முன்னேற்றம் ஏற்படல்.
- நாட்டுக்கு அந்நியச் செலாவணி வருமானம் கிடைத்தல்.





தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

⇒ புடைவைக் கைத்தொழிலின் வளர்சியானது இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டதாகும்.

⇒ இளவரசனான விஜயனுக்கு இலங்கைக்கு வரும்போது இளவரசியான குவேனி கடற்கரைப் பக்கத்திலிருந்து பருத்தி நூல் நூற்றமையிலிருந்து இலங்டகையில் ஆடைக் ழைகத்தொழில் காணப்பட்டதுக்கு சான்றாகும்.

⇒ இலை குழைகள், மரஉச்சிகள், விலங்குகளின் தோல் என்பவற்றின் மூலம் சூடு, குளிர் விலங்குகளிலிருந்து பாதுகாப்பு பெற மறைத்துக் கொண்டனர்.



**“மரப்பட்டைத் துண்டுகளை ஒன்றை ஒன்று இணைத்தலும் மிருகத் தோல் கீலங்களை பிணைத்தலுமே” புடவை உற்பத்தியின் ஆரம்பமாகும்**

⇒ நெய்யப்பட்ட புடவை உற்பத்தி செயற்பாடு கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்பத்தில் எந்த உபகரணங்களும் பயண்படுத்தப்படவில்லை ஆரம்பகாலத்தில் மரங்களிலான உபகரணங்களை பயண்படுத்தினர்.

⇒ தாவர, விலங்கு நார்கள் தொடர்பாக கவனம் செலுத்தினான்.

⇒ ஐரோப்பிய நாடுகளில் காலநிலைக்கு மிகவும் பொருத்தமானது செம்மறி ஆட்டின் ரோமங்களினால் ஆக்கப்பட்ட துணியாகும்.

⇒ ஆரம்பகாலத்தில் சீனா இந்தியா, எகிப்து தென் அமெரிக்கா பேரு போன்ற நாடுகள் ஆடை உற்பத்தியில் முன்னேற்ற நாடகளாகும்

⇒ 20ம் நூற்றாண்டில் நெசவுக் கைத்தொழில் முன்னேற்றமடைந்ததோடு படிப்படியாக உயர்நுட்பமுறைகள், தொழில் நுட்ப உபகரணங்கள் பயண்படுத்தப்படும் கைத்தொழிலாக மாறியது

⇒ 1960ம் ஆண்டளவில் இலங்கையில் ஆடை உற்பத்தி ஆரம்பமாகியது.

⇒ 1977 ஆம் ஆண்டு ஆரம்பமான பொருளாதார கொள்கையுடன் ஆடைக் கைத்தொழிலானது துரித வளர்ச்சியடைந்துது.



தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



⇒ உயர்தரத்திலான தைக்கப்பட்ட ஆடைக் கைத்தொழிலானது 20 ஆண்டுகளுக்குள் சர்வதேச சந்தையில் நன்மதிப்பை இலங்கையின் தைக்கப்பட்ட ஆடைக் கைத்தொழில் பிடித்துக்கொள்ள முடிந்துள்ளது.

⇒ **ஆடைக் கைத்தொழிலானது** இலங்கையின் மொத்த **தேசிய உற்பத்தியிலும் பொருளாதாரத்திலும்** நேரடிப் பங்களிப்பை செலுத்துகின்றது.

## ஆடைக் கைத்தொழிலுடன் இணைந்த வெவ்வேறு கைத்தொழில்கள்

⇒ தையல் இயந்திர பாகங்கள் உற்பத்தி

⇒ துணிகளுக்கு நேர்த்திகள் இடும் கைத்தொழில்கள்.

உதாரணம் - நொதியப் பரிகரிப்பு

⇒ பொதியிடும் பொருட்கள், கூறுகள்

⇒ அழுத்துவதற்கு அவசியமான பொருட்கள்

உதாரணம் - துணி அழுத்தும் பலகை

⇒ வெவ்வேறு துணி உற்பத்திகள்

⇒ நூல் வகைகள்

⇒ தெறி நிறமூட்டுதல்

⇒ தைக்கப்பட்ட ஆடைகளுக்கான சுட்டுத்துண்டு

⇒ இலாத்திக் (Elastic) வகை

⇒ துணி, ஆடை அச்சிடல்





இலங்கையில் ஆடை ஏற்றுமதி மேற்கொள்ளும் போது அந்தந்த நாடுகளுக்குரிய வரியை செலுத்த நேரிட்டது. எனினும் GSPT சலுகை கிடைக்கப்பெறின் அந்நாடுகளுக்கு வரி செலுத்த வேண்டிய அளவானது 9% குறையும்.

தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## 6.2 தைக்கப்பட்ட ஆடைக்கைத்தொழிலின் செயனமுறைத்திட்டங்கள்

**இதன் விளைவுகளாக....**

⇒ இலங்கையின் ஆடைகளுக்கான கேள்வியும் அதிகரிக்கும்.

⇒ அதிக தொழில் வாய்ப்புகள் உருவாகும்.

⇒ ஆடைக் கைத்தொழிலுடன் இணைந்த வருமான வழிகளை மேம்படுத்தல்.



⇒ கவர்ச்சிகரமான உயர் சம்பள திட்டம் ஏற்படல்.

⇒ ஆடைக் கைத்தொழிலுடன் இணைந்த கைத்தொழில்களில் வளர்ச்சி ஏற்படல்.

### ஆடைத் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் படிமுறைகள்

**நவநாகரிக பாணியை நிர்மாணித்தல்**
↓
**முன்னரான திட்டமிடல்**
↓
**மாதிரியுருவை அமைத்தல்**
↓
**அளவீட்டை குறிப்பிடல**
↓
**துணியின் தரத்தைப் பரிசீலித்தல்**
↓
**துணியை வெட்டுதல்**
↓
**தைத்தல்**
↓
**தைக்கப்பட்ட ஆடையின் தரத்தை பரிசீலித்தல்**
↓
**முடிப்பு**
↓
**பொதியிடல்**





தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## நவநாகரிகப் பாணி நிர்மாணித்தல்

பல்வேறு வடிவங்கள், நிறங்கள் ஆகியவற்றை கொண்டு துணி வகைகள் மற்றும் வேறு அமைப்புக்கள் போன்றவற்றை பயன்படுத்தி அணிவதில் உள்ள சொகுசு, அழகு போன்றன தொடர்பாக கவனம் செலுத்தி ஆடைகளை நிர்மாணித்தலே **நவநாகரிக பாணி நிர்மாணித்தல்** ஆகும்



## நவநாகரிகப் பாணியில் நிர்மானிப்பதற்கு தகவல்களைப் பெறும் மூலகங்கள்

⇒ சந்தை அவதானிப்புக்கள்

⇒ சர்வதேச ரீதியில் காணப்படும் நவீனமயப்படுத்தப்பட்ட வடிவமைப்புக்கள்

⇒ வடிவமைப்பு சஞ்சிகைகள்

⇒ வடிவமைக்புக்கள், வர்ணங்கள் தொடர்பான அறிவுறுத்தல்

⇒ ஆடை உற்பத்தியாளர்களின் போட்டித் தன்மை

⇒ சில்லறைச் சந்தை நுகர்வாளர்களின் கருத்துக்கள்



## சீரான திட்டமிடல்

⇒ தெரிவு செய்த ஆடைக்கேற்ப மாதிரி ஆடை ஒன்று நிர்மானிக்கப்படும்.

⇒ துணியின் உயரம், அகலம், வடிவம் போன்றன தொடர்பாக, கவனம் செலுத்தி திட்டமிடல்.

⇒ ஆடையில் பயன்படும் தையல்கள், மடிப்புகள், திறப்புக்கள், சுருக்குகள் தொடர்பான திட்டமிடல்.

## மாதிரியுரு நிர்மாணித்தல்

⇒ உத்தேசிக்கப்பட்ட ஆடையின் சிறிய நடுத்தர அளவுகளில் மாதிரி உரு தயாரிக்கப்படும்.

⇒ மாதிரி உருக்கள் தடிப்பான கடதாசியின் மீது அல்லது மெல்லிய பிளாத்திக் அட்டையின் மீது கணணி அல்லது கைமுறை மூலம் வரையப்படும்.



தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




## துணியின் தரத்தை பரிசீலித்தல்

தெரிவு செய்த துணியின் நெசவு, அங்குலத்திற்கு துணியின் தன்மை, இழையமைப்பு, நிறம், சலவை, சூரிய ஒளி, மற்றும் வியர்வைக்கு ஈடு குடுக்கக் கூடிய தன்மை, சலவையின் போது உராய்விற்கும், வெளிற்றலுக்கும், குளோரினுக்கும் , அழுத்தலுக்கும் ஈடு கொடுக்கக் கூடிய தன்மை போன்றவற்றை துணியில் பரிசீலித்தல் ஆகும்




## துணியை வெட்டுதல்

துணியை அடுக்குகளாக மேசையின் மேல் விரித்து அவற்றின் மேல் அளவட்டையை வைத்து குண்டுசிகளினால் இணைத்து மேசையில் நன்கு தாபித்து உரிய உபகரணத்தின் மூலம் துணி அடுக்குகளை ஆடையின் பகுதிகளாக வெட்டி வேறாக்குதல் துணியை வெட்டுதல் எனப்படுகிறது.




**துணியை வெட்டுதல் இரண்டு கட்டங்களாகச் செய்யப்படும்.**

1. பருமட்டாக வெட்டுதல்.
2. இறுதியாக வெட்டுதல்.



தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



சில சந்தர்ப்பங்களில் பருமட்டாக வெட்டுதல் மேற்கொள்ளப்படாது.. இறுதியாக வெட்டுதல் மட்டும் மேற்கொள்ளப்படும்.

## தைத்தல்

ஆடைக் கைத்தொழிலில் தையல் இயந்திரம் மூலமே தைக்கப்படும்.

- ஆடையில் ஒவ்வொரு பகுதியையும் தைப்பதற்கு வெவ்வேறு தையல் முறைகள் பயன்படுத்தப்படும்.

  உதாரணம்- நூல் கழன்று போகத்தக்க விளிம்புகளை நேர்த்தி செய்யும் over lock தையல் முறை பயண்படுத்தப்படும்

## ஆடைத் தொழிற்சாலையில் ஆடைகள் தைக்கப்பட்டு முடிப்பு செய்யப்படும் பல்வேறு முறைகள்

1) தனிஒருவரே ஆடையை தைத்து முடித்தல்.
2) ஆடையின் பல்வேறு பாகங்கள் பல்வேறு நபர்களினால் தைத்து முடிக்கப்படல்.
3) சிறு குழுக்களாக இணைந்து ஒரு ஆடையை பூரணப்படுத்தல்.

## நேர்த்தியாக்கல்கள்

⇒ தேவையற்ற நூல் பகுதிகளை வெட்டுதல், வெப்ப முறையில் அழுத்தல் ஆகியன மூலம் தைத்த ஆடையிலும் உயர்வான நேர்த்தியை உருவாக்கலாம்.

⇒ சௌகரியம், அழகு என்பவற்றை இதன் மூலம் ஏற்படுத்தலாம்.



## தரச்செவ்வை காப்பு

⇒ இங்கு ஆடையின் வடிவம், தையல் முறைகளின் பயன்பாடு, தையல் திறப்புக்களின் மூடும் முறை, உட்புற நேர்த்தி போன்ற அனைத்தும் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என சரிபார்க்கப்படும்.

⇒ இதனால் உயரிய நேர்த்தி கொண்ட ஆடையை சந்தைக்கு முன்வைக்கலாம்.

தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## பொதியிடல்

தைக்கப்பட்ட ஆடைகளின்(சேட்) கழுத்துப் பட்டிகைக்கு தடித்த கடதாசி நாடா இடல், கவ்வி இடல், சேட்டினுள் மடிப்பு வடிவிற்கு தடித்த கடதாசி இடல், குண்டூசி குத்துதல், சுட்டுத் துண்டிடல், பொலித்தீன் உறைகளில்/ பெட்டிகளில் பொதியிடல் என்பன இதிலடங்கும்.






**வணிகத் தையல் முறைகளினை 6 வகைகளாக வகுக்கலாம்**

| தையல் வகை (Stitch Class) | தையல் (Stitch) |
|---|---|
| 100 | தனிநூல் சங்கிலித் தையல் [ Chain stich - single thread] |
| 200 | கைத் தையல் [ Hand stich] |
| 300 | லொக் தையல் [ Lock stich] |
| 400 | ஒன்றிற்கு மேற்பட்ட நூல்கள் இடப்பட்ட சங்கிலித் தையல் [ Multi thread chain stich] |
| 500 | விளிம்பு முடிப்புடன் கூடிய சங்கிலித் தையல் [ Over - edge chain stich] |
| 600 | மறைப்புச் சங்கிலித் தையல் [ Covering chain stich] |



**மேலே குறிப்பிட்ட 200 வகுப்பைச் சேர்ந்த தையல் முறைகள் கையால் தைக்கப்படும் ஏனைய எல்லாத் தையல் முறைகளும் தையல் பொறியினால் தைக்கப்படும்.**



தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**வணிகத் தையல் முறையின் மூன்று முக்கியமான பண்புகள்**

1. தையலின் நீளம்
2. தையலின் அகலம்
3. தையலின் ஆழம்



**தையல் இழுவிசை**

- தையல் இழுவிசை கூடுதல் அல்லது குறைதல் தையலின் தன்மையில் மாற்றம் ஏற்படக் காரணமாக அமையும்.

**தையலின் இழுப்பு**

- தையலின் சீரான தன்மையைப் பேண தையலின் பதம் அவசியம்.

## தையல் வகுப்பு 100 [Stich Type 100]


⇒ இது தனி நூலினால் ஆன சங்கிலித் தையல் / சாதாரண சங்கிலித் தையல் ஆகும்.

⇒ தனி ஊசிகள் / பல ஊசிகளைப் பயன்படுத்தி தைக்கலாம்.

⇒ இத் தையலில் இடைப்பின்னல்கள் தோன்றும்.

⇒ இங்கு 101,103,104 ஆகிய சங்கிலித் தையல்கள் பயன்படுத்தப்படும்.

⇒ இங்கு விசேட தையல் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.



தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



**தையல் வகுப்பு 101 - தனி நூல் சங்கிலித் தையல்**


⇒ வணிகத்தையல் முறைகளில் எளியமுறை

⇒ துணியின் கீழ்ப்பக்கத்தில் தடங்கள் போன்று அமையும்.



**இத்தையலில் இறுதித் தையலிலிருந்து பின்நோக்கி இலகுவில் கழன்றுவிடுவது இதன் பிரதிகூலமாகும்.**






தனிநூல் சங்கிலித் தையல் (Single thread chain stitch)

**தையல் வகுப்பு 103 மறைப்புத் தையல் [Blind Stich]**

⇒ இதற்கு வளைவான ஊசி பயன்படுத்தப்படும்.


⇒ நூல் துணியின் மேற்பட்டையிலேயே செல்லும்.

⇒ மேலே மட்டும் தையல் தோன்றுவதனாலேயே மறைப்புத் தையல் எனப்படுகிறது.

⇒ உள்ளாடைகள், குளியலுக்கான ஆடைகள், விளையாட்டு ஆடைகளில் இத்தையல் பயன்படுத்தப்படுகிறது.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




மறைப்புத் தையல் (Blind Stitch

## தையல் வகுப்பு - 200



⇒ ஒரு ஊசியோ/ பல ஊசிகளோ பயன்படுத்தி தைக்கலாம்.

⇒ ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் பயன்படுத்தப்படும்.


⇒ தையல் ஒரு தனிக்கோடு போன்று காட்சியளிக்கும்.

## கைத்தையல் வகை 201 ( Hand Stitch)

⇒ பழமை வாய்ந்த தையல் முறையாகும் இரண்டு துணிகளை ஒன்றாக இணைக்கப் பயன்படும்.

⇒ ஒரு ஊசி/பல ஊசிகள் பயன்படுத்தல்.

⇒ துணியின் இரு பக்கங்களிலும் தனி ரேகையாக தையல் காட்சியளிக்கும்.





கைத்தையல் வகை 201 Hand Stitch - (Type 201)


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இடைப் பூட்டு எந்திரத் தையல்

⇒ இரு நூல்கள் அல்லது அதிலும் அதிகமான நூல்கள் தொடர்வதன் மூலம் கட்டி இழுக்கப்படும்.
⇒ இத்தையல் ஊசி நூல் துடிக்கட்டையில் நூல், முடிவு நூல் என்பவற்றாலானது.




இடைப்பூட்டு எந்திரத் தையல் 301 (Lock stitch - 301)


## 304 ஆடை நெளி ஓவர் லொக் தையல்

⇒ தையலினை இரண்டு பக்கங்களும் ஒரே மாதிரியாக அமைந்திருக்கும்.
⇒ இரண்டு நூல்கள் பயன்படுத்தப்படும்.




## ஓவர் லொக் தையல்

⇒ இத்தையல் விளிம்பு நேர்த்தி முறையாக பயன்படுகிறது.
⇒ வெவ்வேறு நூல் வகைகள் இங்கு பயன்படுத்தப்படும்.





தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# 6.3 இல்லத் தளபாட அணிகள்

இல்லத் தளபாடவணிகள் என்பன வீட்டில் அன்றாடம் பயன்படுத்தப்படும் துணியினாலான படுக்கை விரிப்புக்கள், துவட்டிகள், நில விரிப்புக்கள், சுவரலங்காரங்கள், மேசை விரிப்புக்கள், துடைதுண்டு, மேசை காப்புத்துண்டுகள், தழுவணை உறை போன்றனவாகும்.

இல்லத் தளபாடவணிகளுக்கு மேலதிகமாக ஆடைக் கைத்தொழிலுக்கான துணி, கைத்தொழில் உற்பத்திக்கான புடவை ஆகியனவும் உள்ளன.

உதாரணம்- 1. வீதியமைப்புக்கான துணி
2. வைத்தியசாலைப் பயன்பாட்டிற்கான துணி
3. விவசாயத்துக்கான துணி
4. கப்பல் மற்றும் மோட்டார் வாகனத்துணி
5. கட்டட நிர்மாணத் துணி



முற்காலத்தில் இல்லத் தளபாடவணிகளுக்காக இலினன் துணி பயன்படுத்தப்பட்டாலும் பிற்காலத்தில் இதற்குப் பதிலாகப் பருத்தித் துணி பயன்படுத்தப்படுகின்றது.

## இல்லத் தளபாட மாதிரியை திட்டமிடல்

ஆக்கம் தொடர்பான சகல விடயங்களும் உள்ளடங்கிய மாதிரித் திட்டமாகும். இது இல்லத்தளபாடவணி தயாரிக்கப்படும் போது பயன்படுத்தப்படுகின்றது.

## அலங்கார தளவாடவணி தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

⇒ ஆக்கும் இல்லத் தளவாடவணி வகை

⇒ பயன்படுத்தப்படும் துணிவகையும், அதன் இழையமைப்பும், நெசவின் தன்மையும்

⇒ நீள அகலமும், வடிவமும்

⇒ நிறப் பொருத்தப்பாடு

⇒ தைப்பதற்குப் பயன்படும் காட்டுரு

⇒ பயன்படுத்தப்படும் தையல்முறைகள்

⇒ அடிப்படைத் தையல்

⇒ நுட்பத் தையல்கள்

⇒ அலங்காரத் தையல்கள்

⇒ பயன்படுத்தப்படும் நூலும் நூல்களின் பொருத்தப்பாடும்

⇒ நேர்த்தி




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மேசை விரிப்பு விரிப்பதன் பயன்கள்

1) சூடான பாத்திரங்களின் வெப்பம் மேசையில் தாக்கம் ஏற்படுவதைத் தவிர்த்தல்.

2) திண்ம அல்லது திரவநிலை உணவுப் பொருட்கள் மேசையில் படுவதால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்தல்.

3) மேசையையும் அது வைக்கப்பட்டுள்ள இடத்தையும் அழகுபடுத்தலும், சீர்படுத்தலும்.



### மேசை விரிப்புக்குத் துணியைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

- தடிப்பான இழையமைப்பு கொண்ட பருத்தி/ லினன் துணியை தெரிவு செய்தல்.
- அலங்கார காட்டுருக்கள் தைப்பதாயின் வெள்ளை / தனி நிற துணியைத் தெரிவு செய்தல்.
- கட்டமிடப்பட்ட துணிகளைத் தெரிவு செய்தல்.
- மேசையை வைக்கும் இடம், கதிரை தழுவணையின் நிறம் என்பவற்றுக்குப் பொருத்தமானவாறு தெரிவு செய்தல்.




# மேசை விரிப்பு


## வட்டவடிவ மேசை விரிப்பு

மேசையின் விட்டம் - 115cm

மேசையின் விளிம்பிலிருந்து கீழே விழும் அளவு - 30cm

வட்டவடிவ மேசையின் விளிம்பின் அளவு– 30cm+115cm+30cm = 175cm (விட்டம்)






வட்டவடிவத் துணியின் பரும்படி படம்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சதுரவடிவ மேசை விரிப்பு


மேசையின் நீளம் - 100cm

மேசையின் அகலம் - 100cm

மேசையின் விளிம்பிலிருந்து கீழே விழும் அளவு - 30cm

சதுரவடிவ மேசையின் விளிம்பின் நீளம் – 30cm+100cm+30cm = 160cm





வட்டவடிவத் துணியின் பருமபடி படம்

## மேசை விரிப்புக்கான அலங்காரமிடுதல்

⇒ மேசை விரிப்பின் விளிம்பின் ஓரத்தில் மூலைகளில் காட்டுருவை அமையுமாறு அலங்கரித்தல்.

⇒ ஒரே காட்டுருவை மீண்டும், மீண்டும் துணியில் சூழ இடுவதன் மூலம் அலங்கரித்தல். (மீளுதல் மூலம் சந்தம்)

⇒ காட்டுருவின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருத்தமான நூலின் நிறத்தால் அலங்கரித்தல்.

⇒ பொருத்தமான ஊசியைப் பயன்படுத்தி அலங்கரித்தல்.

⇒ தெரிவு செய்யப்படும் மேசை விரிப்பின் நிறத்திற்கும் இடப்படும் காட்டுருவிற்கும் ஏற்ற நூலினைத் தெரிவு செய்து அலங்கரித்தல்.

⇒ மேசை விரிப்பின் விளிம்பைச் சீர் செய்ய இரேந்தை/ குஞ்சம் பயன்படுத்தி அலங்கரித்தல்.





தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| தைப்பதற்கு பயன்படும் பொருட்களும் கருவிகளும் | |
|---|---|
| **கருவிகள்** | **பொருட்கள்** |
| கத்திரிக்கோல் | நூல் வகைகள் |
| தையல் ஊசி | காரிக்கன் துணி/ பருத்தித் துணி |
| பென்சில் | அணைபொருள் (பொலிபீல்) |
| தீதாள் | துணிக்காபன் கடதாசி |
| சுவடு வரைச் சில்லு | சரிவுக்கோட்டுத்துண்டுகளுக்கான கோடுகள் |
| அடிமட்டம் | |

## கைத்துடைப்பம்

⇒ கைத்துடைப்பம் சதுர வடிவிலேயே காணப்படும்.

⇒ குறைந்தது 38cm [18”] அளவுடையதாக இருக்கும்.

⇒ கைத்துடைப்பத்திற்கு கஞ்சியிட்டு தயார்ப்படுத்தி தேவையான வடிவங்களில் பயன்படுத்தலாம்.






கைத்துடைதுண்டை மடித்துவைக்கத்தக்க முறைகள்

## மேசைக்காப்புத் துண்டு

⇒ சூடான பொருட்களை மேசையில் வைக்கும் போது அதன் வெப்பம் மேசையின் மேற்பரப்பை அடையாது பாதுகாப்பதற்காக மேசைக்காப்புத் துண்டு பயன்படுகிறது.

⇒ உணவு பரிமாறும் இடத்திற்கு அழகையும், ஒழுங்கையும் பெற்றுத்தரும்.




வட்ட வடிவான இரு காரிக்கன் துணித் துண்டுகள்

அலங்காரத் திணிப்புச் (Quilt) செய்து சரிவுக் கோட்டுத் துண்டுகள் வைத்துத் தைத்தல்

பூரணப்படுத்தப்பட்ட மேசைக் காப்புத்துண்டு

தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## மேசைக்காப்புத் துண்டு தைக்கும் படிமுறை ஒழுங்கு

18 cm விட்டமுள்ள வட்டமொன்றைக் கடிதாசியில் வெட்டுதல்



↓

இம்மாதிரியுருவைப் பயன்படுத்தித் துணியினால் இரு வட்டத் துண்டுகள் வெட்டுதல்

↓

ஒரு துண்டின் மேல் பொருத்தமான காட்டுருவை வரைந்து அலங்காரத் தையல்கள் இடல்

↓

16 cm விட்டமுள்ள வட்டமொன்றை அணைபொருளொன்று (padding) இனாலும் வெட்டி அது நடுவில் அமையுமாறு இரு துணித் துண்டுகளையும் இருபுறமும் வைத்து குண்டூசியால் இணைத்தல்.



↓

சுற்றிவரப் பெருநூலோடுதல்

↓

விரும்பியவாறு சிறுநூலோடல் மூலம் அலங்காரிப்புச் செய்தல்

↓

சுற்றிவர உள்ள மேலதிக திணிப்புப் பகுதிகளை வெட்டுதல்

↓


பொருத்தமான நிறத்தில் சரிவுக்கோட்டுத் துண்டினை சுற்றிவர வைத்து நூலோடி நிரந்தரத் தையலிடல்

↓

சரிவுக்கோட்டுத் துண்டில் அரைவாசி அதனைச் சுற்றிவர தையல் துண்டிக்கப்படாதவாறு வெட்டுக்கள் வெளியே தெரியுமாறு பிழைப்பக்கமாக நூலோடி வெளிமடித் தையல் மூலம் நேர்த்தியாக்கல்.

↓

பைண்டிங் தைத்தல்



↓

திணிப்பைப் பயன்படுத்தி அலங்காரத் திணிப்புச் செய்தல்

தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




## தையல் நுட்ப முறைகள்

⇒ விளிம்பு மூடித்தைத்தல்/ பைண்டிங் செய்தல்.

⇒ இரேந்தை பிடித்தல்.

### விளிம்பு மூடித்தைத்தல்

⇒ பைண்டிங் ஆனது விளிம்பு நேர்த்தியாக்கலுக்கு பயன்படும் முறையாகும்.

⇒ இதற்காக சரிவுக்கோட்டுத்துண்டு பயன்படுத்தப்படும்.

⇒ சரிவுக்கோட்டுத்துண்டில் பாவுநூலும், ஊடை நூலும் சரிவாக அமைந்துள்ளன.





### இரேந்தை பிடித்தல்.

⇒ மேசை விரிப்பின்/ மேசைக்காப்புத் துண்டின் விளிம்புகளை நேர்த்தியாக்க பயன்படுகிறது.



தொகுப்பு - திரு.செ.பாஸ்கரன், மனைப்பொருளியல் ஆசிரியர் (மு/பாரதி வித்தியாலயம்)
திருமதி.தி.பிரசாளினி, மனைப்பொருளியல் ஆசிரியர் (கி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்)
கணினி வடிவமைப்பு - செல்வி.ப.புருசோத்தமி, த.தொ.தொ ஆசிரியர் (வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk









## பிரசீலியன் தையல்




பிரசீலியன் அலங்கரிப்பு இடப்பட்ட ஆக்கம்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சங்கிலித் தையல்



சங்கிலித் தையல் மூலமான ஆக்கம்


## நரம்புத் தையல்





நரம்புத் தையல் மூலமான ஆக்கம்

## சற்றின் தையல்






நரம்புத் தையல் மூலமான ஆக்கம்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk